**தங்காலை நகர சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன் , அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 23 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து தங்காலை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ் விவரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) 2015 ஆண்டிற்கான முத்திரை கட்டண வருமானத்தை சீராக்கல் மேற்கொண்ட போது ரூபா 2,026,724 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நகர சபை அலுவலக வளவில் பௌத்த சிலை வைக்கும் அறையொன்று நிர்மானிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 160,000 இற்கு செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான எரிபொருள் செலவுக்காக ரூபா 33,300 தொகை மிகையாக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத் கணக்குகள்

நிதிக் கூற்றுகளிலுள்ள முத்திரை கட்டணம் மீதி மற்றும் முத்திரை கட்டண பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 3,120,419 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

#### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

1999 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரையான காலப்பகுதி தொடர்பாக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 3,915,839 இற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 9,076,622 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| நகர சபை கட்டளை சட்டம் (அதிகாரம் 255) | | |
| (i) | பிரிவு 72(2)மற்றும் (3) | புதிய கடை வீதியின் 31 ஆம் இலக்க கடை மற்றும் பொது கழிவறைக்கு மத்தியில் காணப்படும் அங்கீகாரமற்ற நிர்மான வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | பிரிவு 165 (ஆ) மற்றும் (அ) | நகரசபை அதிகார எல்லையின் தொழில் செய்யும் அனைவரிடமும் வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) | பிரிவு 227 (1) | நகரசபை ஒன்றின் அங்கத்தவர் ஒருவர் உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஒருவரினால் சபையுடன் உடன்படிக்கை தொடர்புகள் வைத்திருக்க கூடாது எனினும் தங்காலை பஸ் நிலையத்தில் 1 ஆம் இலக்க கடையை வாடகைக்கு கொடுக்கும் போது அதற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. |

**1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

நகர ஆணையாளர்கள் மற்றும் நகரசபை தலைவர்களை விழித்த உள்ளூராட்சி வீட்டமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளரின் 1982 ஜுலை 27 ஆம் திகதி எல்ஜி/டீ/26/13 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான வாடி வீடுகளில் கட்டிடங்கள் மற்றும் தளபாடங்களை பழுதுபார்ப்பதற்காக ஏற்படும் செலவுகளை வாடகையாளர்களினாலேயே மேற் கொள்ளப்பட வேண்டுமெனினும் வாடி வீட்டு கட்டிடத்தின் பழுதுபார்த்தலுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் செலவிடப்பட்டிருந்த தொகையில் ரூபா 1,050,000 தொகையினை சபைக்கு அறவிடப்பட வேண்டிய வாடி வீட்டு வாடகையில் கழிக்கப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 5,988,438 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,419,278 தெகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 3,100,000 | 3,075,996 | 3,426,540 | 394,406 | 2,900,000 | 2,791,190 | 3,935,843 | 966,145 |
| (ii) வாடகை | 11,777,100 | 10,292,685 | 5,249,302 | 321,606 | 9,418,000 | 8,420,829 | 7,882,296 | 3,080,300 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 1,249,000 | 816,672 | 815,642 | - | 677,000 | 1,055,027 | 1,065,027 | - |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 19,311,500 | 15,342,565 | 11,138,603 | 14,457,168 | 18,283,800 | 10,746,076 | 7,827,313 | 8,018,250 |
| மொத்தம் | 35,437,600 | 29,527,918 | 20,630,087 | 15,173,180 | 31,278,800 | 23,013,122 | 20,710,479 | 12,064,695 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 29,527,918 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 20,630,087 தொகை சேகரிக்கப்ட்டிருந்தது. முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 12,064,695 தொகைக்கான மொத்த நிலுவைத் தொகை மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 15,173,180 தொகை வரை அதிகரித்திருந்தது.

### 2.2.3 வீத வரியும் வரியும்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 394,406 தொகைக்கான நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அந்த நிலுவையில் ரூபா 1000ஐ விட மிகையான 73 வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 288,642 இற்கான தொகையும் அடங்கியுள்ளது.

### 2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 25 கடைகளில் இருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 167,706 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அப் பணத்தை அறவீடு செய்வதற்காக நகரசபை கட்டளைச் சட்டத்தின் 170 (அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 143 கடைகள் தொடர்பாக 2016 பெப்ரவரி 23 ஆம் திகதி ஹம/கு.பு/804 ஆம் இலக்க பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் திருத்தப்பட்டிருந்த மாதாந்த வாடகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 27 ஆம் திகதியில் த.ப.பா/பபகொ/2010/01 இலக்கம் கொண்ட தென் மாகாண, உள்ளராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்திக்கு இணங்க அனைத்து உடன்படிக்கைளும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டுமெனினும், 42 கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் 07 வருடங்கள் முதல் 32 வருடங்கள் வரையான காலம் முதல் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேலே (இ) பந்தியில் காட்டப்பட்டுள்ள சுற்றறிக்யையின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் அங்கீகாரம் இன்றி வேறு தரப்பினருக்கு வாடகை உரிமையை சாட்டுதல் எவ்விதத்திலும் செய்யக் கூடாது எனினும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக மாதாந்தம் ரூபா 4,500 முதல் 20,000 வரையான வீச்சில் வாடகைத் தொகை அறவிடப்பட்டு சபையின் 8 கடைகள் துணை வாடகைக்கு வழங்கியிருந்தது. என 2018 ஜனவரி 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது அவதனிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகரசபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதி மற்றும் நலனோம்பு ஆகிய செய்பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) நிறைவேற்றப்படாத செய்பணிகள்**

---

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றுவதற்கு திட்டமிட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 8,250,000 தொகைக்கான 09 அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகமைத்துவம்**

---

சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிபத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் போதியளவு தீ அணைப்பு உபகரணங்கள் மற்றும் வசதிகள், செயற்பாட்டை நடாத்தப்படும் நடைபெறும் நிலப் பகுதியில் நிறுவியிருக்கவில்லை. மேலும் சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்த முடியாத திண்மக் கழிவு பொருட்களை திறந்த நிலமொன்றில் குவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதன் மீது மண் அடுக்கு ஒன்று போடப்பட்டு மூடியிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---

நிலைபேறான அபிவிருத்திகள் 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

---

மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வீஈ/01/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படாமையினால் 2017 ஆண்டு இறுதியளவில் நகரசபை அதிகார பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 927 வீதி விளக்குகளில் 293 வீதி விளக்குகளுக்காக மாத்திரம் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

---

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணியில் 05 பதவிகளில் 13 பேரின் மிகையும் 17 பதவிகளில் 31 பேரின் வெற்றிடமும் காணப்பட்டது. மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதை போலவே வெற்றிடங்களை நிரப்பி கொள்வதற்கும் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நீண்ட காலம் முதல் சேவையை விட்டுச் சென்றிருந்த மற்றும் இறந்துள்ள 17 பேரிடம் சபைக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 88,856 தொகைக்கான பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தங்காலை வாராந்த சந்தைக்கு அண்மையில் நிர்மானிக்கப்பட்டிருந்த 27 கடைகளை கொண்ட இந்தக் கடைத் தொகுதி 2007 ஆண்டு முதல் 2013 வரை வாடகைக்கு கொடுத்திருந்ததுடன், இந்த கடைகளில் 12 கடைகள் புதிய கடை வீதியிலுள்ள கடை உரிமையாளருக்கு வழங்கப்பட்டு உரிமை கைவிடப்பட்டு மீண்டும் சபைக்கு உரித்தாகியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதிவரையும் அந்த கடைகளை வேறு தரப்பினருக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) இந்த கடைகளுக்காக சிட்டையிடப்படாவிடினும், 5 கடைகள் சந்தை நடக்கும் நாட்களில் திறக்கப்பட்டிருப்பதாக 2018 ஜனவரி 15 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த ஆனால் மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருக்காத, கடைகள் மற்றும் வாடகைக்கு கொடுத்திருக்காத கடைகளுக்காக 2016 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் 2017 ஆண்டின் போது நகரசபை இழந்துள்ள வருமானம் ரூபா 409,200 தொகையாகும் .

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

தீ மற்றும் அனர்த்த முகாமைத்துவ அலகின் 03 உபகரணத் தொகுதிகள் (Tool kit set) வெளிதரப்பினரால் எடுத்துச் செல்லப்பட்டு 03 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அவற்றை மீண்டும் சபைக்கு பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

2016 ஆண்டிற்கான நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட 25 காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்ட ரீதியான உரிமை 2018 ஜனவரி 15 திகதி அளவிலும் நகர சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5.3 வருடாந்த பண்டக் கணிப்பீடு**

(அ) பல வருட காலமாக பற்றாக்குறை என இனங்காணப்பட்டிருந்த 05 பண்ட வகைகள் தொடர்பாக விதப்புரைகள், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் செயற்படுத்தியிருக்காததுடன் பல வருட காலம் முதல் குறைவாக உள்ளது என இனங்காணப்பட்டு மீண்டும் சபைக்கு கிடைத்திருந்த பல்கரும கொண்டு செல்லக்கூடிய 05 குடில்கள் அவற்றின் மேற்பகுதி மூடி பயன்படுத்த முடியாத அளவு அழிவுற்று காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆண்டிற்கான நிலையான சொத்துக்கள் கணிப்பிட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 05 விதந்துரை 2018 ஜனவரி 15 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை.

**3.5.4 வாகன பயன்பாடு**

**(அ) வாகனங்களின் உரிமையை உரித்தாக்கல்**

சபையினால் பயன்படுத்தப்படும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குச் சொந்தமான டிரக்டர் வண்டிகள் பதிவு செய்தல் உரிமையை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் சபைக்கு உரித்தாகியிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான 04 வாகனங்களின் மைலோ மிற்றர் / மணித்தியால மிற்றர் செயற்பட்டிருந்த போதிலும் 6 மாதம் முதல் 72 வரை காலப் பகுதியில் ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருந்த.

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகை திட்டம்**

மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**3.6.2 ஒப்பந்த வேலை நிருவாகம்**

2017 ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து வாராந்த சந்தையின் முற் பகுதியில் வடிகால்களுக்கு கொங்கிரீட் தகடுகள் போடும் நிர்மான வேலைக்காக 10 சதவீத தடுத்து வைத்தல் பணம் கழித்த பின்னர் ரூபா 283,288 இற்கு தொகையொன்று ஒப்பந்தகாரருக்கு செலுத்துவதற்காக எழுதப்பட்டிருந்த 132884 ஆம் இலக்கம் கொண்ட காசோலை 2018 ஜனவரி 16 திகதி அளவிலும் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. போடப்பட்டிருந்த கொங்கிரீட் தகடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட கொங்கிரீட் கலவை மிகவும் பலவீன மட்டத்திலும் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் 2018 ஜனவரி 15 அளவிலும் 05 கொங்கிரீட் தகடுகள் பயன்படுத்த முடியாத அளவில் வெடிப்படைந்திருந்தது. இந்த நிலைமையை கணக்காய்வினால் சுட்டி காட்டிய பின்னர், 05 கொங்கிரீட் தகடுகளை தரப் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டிருந்ததுடன் ஆய்வு கூட பெறுபேறுகளின் பிரகாரம் வலு $20(N/nm^2)$ தரத்தில் காணப்பட வேண்டுமெனினும் அவற்றின் சக்தி 9 முதல் $15(N/nm^2)$ இடைப்பட்ட மட்டத்தில் காணப்பட்டது அதன் பிரகாரம் பரிசோதனை ஆளாக்கப்பட்ட அனைத்து தகடுகளும் உரிய நியமத்தின் காணப்படவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே பின்வருமாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 34,580,969 தொகையாக காணப்பட்டதுடன் அப் பெறுமதிகள் 13 சதவீதம் முதல் 78 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(ஆ) வழங்கல் மற்றும் உபகரணங்கள் செலவு விடயத்தில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 801,876 தொயையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 17 சதவீதமாக இருந்தது.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்தம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்காக 03 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | முறைமையின் பிரதான குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிதிக் கூற்றுகளில் மற்றும் துணை பதிவேடுகளில் காட்டப்பட்டிருந்த பெறுமதி களிடையே வித்தியாசம் காணப்படல். |
| | (ii) கணக்கு மீதிகள் மிகையாக காட்டப்பட சந்தர்பங்கள் காணப்படல். |
| | (iii) நிலையான சொத்துக்கள் மூலதனப் படுத்தடாத சந்தர்பங்கள் காணப்படல். |
| (ஆ) வருமான நிருவாகம் | (i) நிலுவை வருமான அறவிடப்படாமை. |
| | (ii) கடைகளுக்கான உடன்படிக்கைகள் முறைப்படி நாளதுவரை ஆக்கப்படாமை. |
| | (iii) புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி கடை வாடகை அறவீடு செய்யப்படாமை. |
| | (iv) அங்கீகாரம் இன்றி கடைகள் துணை வாடகைக்கு கொடுத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (இ) ஊழியர் முகாமைத்துவம் | மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (உ) பாதீட்டு கட்டுபாடு | (i) பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே கணிசமன முரண்கள் காணப்படல். |
| | (ii) பாதீட்டு மற்றம் உள்ளவாறான வருமான இலக்குகளை பூர்த்தி செய்திருக்காமை. |